2017-2018-ஆம் ஆண்டிற்கான காவல் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் மானியக் கோரிக்கைகள் மீதான விவதாத்திற்கு பின் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் பதிலுரை – 8.7.2017

---

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !**

காஞ்சித் தலைவன் முகம் பொரித்த –
கழகத்தின் திருக்கொடியை,

காந்தி தேசத்தின் புகழ் கொடியாக்கிய –
எங்கள் ஒப்பில்லா தலைவியே,

அருமருந்தே, எங்கள் அண்ணையே,
அகிலம் போற்றும் அகல்விளக்கே,
குலம் காக்கும் எங்கள் குலவிளக்கே,

மக்கள் திலகம் வழிவந்த மணிவிளக்கே,
மங்காத எங்கள் ஒளிவிளக்கே.

அறிவுலகமே அதிசயிக்கும்,
அஞ்சாமையின் சிகரமே,

அள்ளி அள்ளித் தருகின்ற
அன்புள்ளத்தின் வார்ப்பாக,

ஏழை மக்களின் நாடிதுடிப்பாய்,
அற்புத விளக்காய்
அன்பாய் – அரணாய்,
அனுதினமும் காத்து –
இன்றும் காத்து
நிற்கும் எங்கள் தாயே,

தாங்கள் உறங்கும் திசை நோக்கி,
வணங்குகிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

முதன் முதலில் மதராஸ் காவல் துறை
உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து
இன்றுவரை கணக்கிட்டுப் பார்த்தால்

நம் மகராசி அம்மாவின் ஆட்சிக் காலம்தான்
காவல் துறைக்கு மறுமலர்ச்சிகள் பல தந்த
மகத்தான பொற்காலம்.

தன் ஆட்சிக் காலத்தில் –
அம்மா அதிகம் நம்பியதும்,
அளவின்றி நலத்திட்டங்களை நல்கியதும்,
காவல் துறையின் மேம்பாட்டுக்காக என்றால்
அது மிகையல்ல!

காரணம்,
ஊர் மக்கள் அமைதியில் உறங்கிட
உறங்காது கடமையாற்றும் உழைப்பு,
நீதியின் முன் குற்றவாளியை நிறுத்தும் வரை
கால நேரம் கருதாது நித்திரை துறக்கும் விழிப்பு,
வரும் முன் காத்திடும் குற்றத் தடுப்பு,
வந்ததும் விரைகிற குற்றக் கண்டுபிடிப்பு,

இழைத்தவர் குற்றத்தை நிரூபித்து தண்டனை பெற்றுத்தர
நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில்
ஏறி ஏறி இறங்கும் ஏராள முனைப்பு, தாராளச் சகிப்பு,

இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து
அவற்றை சிந்தையிலே பதித்து,

காவலர்களுக்கு பூரணச் சுதந்திரத்தை வழங்கி,
தமிழகத்தின் காக்கிச் சட்டைக்கு
மிடுக்கு குறையாத கம்பீரத்தை வழங்கியதும்,

நவீன ரக ஆயுதங்கள்,
அதிநவீன வாகனங்கள்,

சாதனை புரிவோருக்கு பதக்கங்கள்,
பரிசுகள், பதவி உயர்வுகள்,

உயிரை துச்சமாகக் கருதி உழைப்பவர்களுக்கு
வீர தீர வெகுமதிகள் என்றெல்லாம்

உலகத்தின் தலைசிறந்த காவல்துறையாக
தமிழகத்தின் காவல்துறையை உயர்த்திக் காட்டிய

நம் புரட்சித்தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய
பாதத் தடத்தில் சாண் அளவும் விலகாது
மாண்புமிகு அம்மா–வின் ஆசியோடு
நடைபெறும் கழக அரசின்

2017–18ஆம் ஆண்டுக்கான
காவல் மற்றும் தீயணைப்புத் துறை
மானியக் கோரிக்கைகளின்

மீதான எனது பதிலுரையை
இப்பேரவையில் சமர்ப்பிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !**

இந்த பேரவையில் 6.7.2017 அன்று என்னால் முன்மொழியப்பட்ட காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆகிய இரண்டு துறைகளுக்கான மானியக் கோரிக்கைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை முன் வைத்துள்ளார்கள்.

இத்துடன் மாண்புமிகு உறுப்பினர்கள் காவல் துறை மானியத்தில் வெட்டுத் தீர்மானங்களும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் மானியத்தில் வெட்டுத் தீர்மானங்களும் கொடுத்துள்ளனர்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களின் அடிப்படையிலும், வெட்டுத் தீர்மானங்களில் கூறப்பட்டுள்ள பொருட்களுக்கு தகுந்த விடையினை இந்த அவையில் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !**

**‘படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு’**

அதாவது சிறந்த படை, குடி, உணவு, அமைச்சு, நட்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைக் கொண்ட அரசு, பிற அரசுகளுள் சிறப்பான அரசாகும் என்று ஓர் நல்ல அரசின் இலக்கணங்கள் குறித்து திருவள்ளுவர் கூறுகிறார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த பிரபல எழுத்தாளரான Simon Sinek என்பவர் ஒரு தலைவர் என்பவர் எவ்வாறு இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகையில்,

‘‘Leadership is not about the next election, it’s about the next generation”,

அதாவது, தலைவர் என்பவர் அடுத்தத் தேர்தலைப் பற்றி எண்ணாமல், அடுத்த தலைமுறையைப் பற்றி எண்ண வேண்டும் என்றும், அமெரிக்கா நாட்டைச் சேர்ந்த புகழ் வாய்ந்த எழுத்தாளரான Warren Bennis என்பவர்,

‘‘Leadership is the capacity to translate vision into reality”,

அதாவது, தான் நினைப்பதை செய்து முடிக்கும் திறன் படைத்தவராக ஒரு தலைவர் இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளனர்.

இந்த அனைத்து குணநலன்களையும் ஒருங்கே பெற்று, பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்ஜிஆர் அவர்களின் அரசியல் வாரிசாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைப் பொறுப்பேற்று,

அரசியல் எதிரிகளின் பல்வேறு சூழ்ச்சிகளையும், தடைகளையும் தகர்த்தெறிந்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை வரலாறு காணாத வெற்றியை நோக்கி, மாநிலத்தின் அமைதி, வளம், வளர்ச்சியையே தமது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்ட நமது இதய தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வகுத்து தந்த பாதையிலே அவரது கொள்கைகளையும், குறிக்கோள்களையும் பின்பற்றி மக்களுக்கு அவர் அளித்த வாக்குறுதிகளை புரட்சித் தலைவி அம்மாவின் அரசு தொய்வின்றி நிறைவேற்றும் விதத்தில் தொடர்ந்து செயல்படும் என உறுதியளிக்கின்றேன்.

பொதுவாக எந்தவொரு மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நல்லமுறையில் பேணிக்காக்கப்பட்டு, அமைதி நிலவுகிறதோ அம்மாநிலத்தில், செழுமையும், வளமையும் ஏற்பட்டு, வேலைவாய்ப்புகள் பெருகி, தனிநபர் வருவாய் அதிகரித்து, மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்.

மேலும், ஒரு அரசானது, மக்களின் உரிமைகளை பாதுகாத்து, சாதி, மத வேற்றுமைகளை நீக்கி, ஏழை, பணக்காரர் இடையே ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து, சிறுபான்மை மற்றும் பெரும்பான்மையினர் ஒற்றுமையாக இருக்க வழிவகுத்து, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டை நிலை நிறுத்தி சமூக நீதியை நிலைநாட்டி ஆட்சி செய்யும் பட்சத்தில் அவ்வரசு மக்கள் நலன் காக்கும் அரசாகக் கருதப்படுவதோடு, மக்கள் விரும்பும் நல்ல அரசாகவும் விளங்கும்.

**அரசு கொண்டு வரும் திட்டங்கள் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு, மாநிலம் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைய வேண்டுமெனில்,**

**நம் நாட்டு தொழில் முனைவோர்களும், பன்னாட்டு நிறுவனங்களும், மாநிலத்தில் முதலீடு செய்து தொழில் துவங்க முன்வர வேண்டும் என்றால்,**

**அம்மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு, பொது அமைதி நிலவ வேண்டும்.**

இதை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள், தொடர்ந்து சட்டம் ஒழுங்கு பராமரிப்புக்கு உரிய முக்கியத்துவம் அளித்து, **காவல் துறையினர் எவ்வித குறுக்கீடும் இன்றி, சுதந்திரமாக தங்கள் பணிகளை நேர்மையாகவும், செம்மையாகவும் மேற்கொள்ள முன்னுரிமை அளித்து** சரியான சூழ்நிலையை ஏற்படுத்தி தந்து, அவர்களுக்கு தேவையான நவீன வசதிகளையும் செய்து கொடுத்து வந்தார்கள்.

மாண்புமி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, காவல் துறையினரின் பணிகளில் தலையீடு ஏதுமில்லாமல் பார்த்துக் கொண்டு வருவதுடன், அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்து, சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தி மாநிலம் தொடர்ந்து அமைதிப் பூங்காவாக திகழ்ந்து வர தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !**

சட்டம் ஒழுங்கு நிலைமை பற்றியும், காவல்துறையின் செயல்பாடுகள் குறித்தும் சில சட்டமன்ற உறுப்பினர்கள் குறை கூறியும், எதிர்மறையான கருத்துக்களையும் இம்மாமன்றத்தில் எடுத்துரைத்துள்ளனர். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் வாதங்களை அவரவர் கண்ணோட்டத்திற்கு தக்கவாறும், அவர்களுக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையிலும் எடுத்துரைத்துள்ளார்கள்.

**போதுமான தகவல்கள் இல்லாமலும், அடிப்படை ஆதாரமில்லாமலும் ஒரு விவாதத்தில் ஈடுபடுபவர்கள், விவாதத்தை தனிப்பட்ட தாக்குதலில் தான் முடிப்பார்கள்.**

அரசு ஒரு திட்டத்தை செயல்படுத்தினாலோ அல்லது ஒரு கொள்கை முடிவு எடுத்தாலோ அல்லது ஒரு அரசாணை வெளியிட்டாலோ அதில் காணும் நிறைகள் அவர்களுக்கு தெரிந்தாலும், எங்கு அரசின் திட்டத்தினாலோ அல்லது கொள்கை முடிவினாலோ அரசுக்கு நற்பெயர் கிடைத்துவிடுமோ என்ற குறுகிய மனபாங்குடன் அதை தடுக்கும் நோக்கத்தில்

**சிறிய குறைகளையும் பூதாகரமாக்கி அறிக்கைகள் விடுவது, பேட்டியளிப்பது, போராட்டங்கள் நடத்துவது, போன்ற செயல்களில் ஈடுபடுவதை ஒரு சிலர் அன்றாட வழக்கமாக கொண்டுள்ளார்கள்.**

அரசின் செயல்பாடுகளை விமர்சிப்பதற்கு ஜனநாயகத்தில் எவருக்கும் உரிமை உள்ளது என்றாலும், அவ்வுரிமையை முறையாகப் பயன்படுத்துகிறோமா? இதனால் மக்களுக்கு பயன் ஏதேனும் ஏற்படுமா? - என்பது பற்றி சிந்திக்காமல், அவர்கள் அரசுக்கு சங்கடத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரே நோக்கில் தினமும் தொலைக்காட்சி மற்றும் நாளேடுகளில் தங்களைப் பற்றி செய்தி வந்தால் போதும் என்ற அளவிலேயே இந்நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

உண்மையில் குறைகள் ஏதும் இருக்குமாயின், அவற்றை மாற்று கட்சி உறுப்பினர்கள் நியாயமான முறையில் அரசின் கவனத்திற்கு கொண்டு வரும் போது, அரசு பரிசீலித்து அக்குறைகளை களைய தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அவ்வாறு இல்லாமல் அரசின் நல்ல திட்டங்களையும், மாநில அரசின் ஆளுகைக்குட்படாத சில பிரச்சினைகளையும் கையிலெடுத்துக் கொண்டு அவை குறித்து குறை கூறும் போது அச்செயல்பாடுகள் அரசை காரணமின்றி குறை கூறும் அவர்களது மன நிலையைக் காட்டுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !**

கடந்த ஆறு ஆண்டுகளாக, தமிழ்நாடு அரசின் சீரிய அறிவுரைகளின் பேரில், தமிழக காவல்துறை, மாநிலத்தில் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் ரவுடிகள், கொள்ளையர்கள், வழிப்பறி கொள்ளையர்கள், சமூக விரோதிகள் ஆகியோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்து சட்டம் ஒழுங்கை எந்தவொரு தொய்வுமின்றி பராமரித்து வருவதுடன், சாதி, சமய மற்றும் அரசியல் பூசல்கள் ஏதும் நிகழாமல் தமிழ்நாட்டை ஒரு அமைதி பூங்காவாக பேணி காத்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலுக்கு முன்பு, திமுக தலைவரும் அதன் நிர்வாகிகளும் சட்டமன்ற எதிர்கட்சி தலைவரும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியின் போது, சட்டம் ஒழுங்கு சீர் குலைந்துவிட்டது என்றும், பொது அமைதி பாதிக்கப்பட்டுவிட்டது என்றும், தொடர்ந்து ஊடகங்களிலும், பொதுமக்களை நேரடியாக சந்தித்தும் உண்மைக்கு மாறாக பிரச்சாரம் செய்து வந்தனர். ஒரு பொய்யை திரும்ப திரும்ப சொல்லும் போது அது உண்மையாகிவிடும் என கருதி உண்மைக்கு மாறான பிரச்சாரத்தில் ஈடுபட்டு, பொதுமக்களை குழப்ப பல்வேறு யுக்திகளை கையாண்டனர்.

ஆனால், பொதுமக்களின் மன நிலை வேறுவிதமாக இருந்ததோடு, மீண்டும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சித் தொடர வேண்டுமென்று முடிவெடுத்து வாக்களித்து வெற்றி பெற செய்தார்கள். இதன் மூலம் அக்குற்றசாட்டுக்கள் அனைத்தும் உண்மைக்கு மாறான மற்றும் அரசியல் உள்நோக்கம் கொண்டவை என நிரூபணமானது.

மேலும், சட்டமன்ற தேர்தல், மாநிலத்தில் முன்பு எப்பொழுதும் இல்லாத வகையில், சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏதுமின்றி அமைதியான முறையில் நடந்து முடிந்தது. இதுவே, கடந்த ஆறு ஆண்டுகளாக சட்டம் ஒழுங்கு சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருவதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

காவல் துறையினர் எடுத்து வரும் பல்வேறு குற்றத்தடுப்பு நடவடிக்கைகளினால், குற்ற நிகழ்வுகள் கடந்த ஆறு ஆண்டுகளாக குறைந்து வருகின்றன.

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியின் 2005 ஆம் ஆண்டு இறுதியில், மாநிலத்தில் 1,366 கொலை வழக்குகள் தாக்கலாகியிருந்தன.**

**அதன் பின்னர் வந்த திமுக ஆட்சியின் இறுதியில் 2010–இல் 1,715 கொலை வழக்குகள் தாக்கலாகியிருந்தன.**

**திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் தாக்கலான கொலை வழக்குகளை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தோடு ஒப்பிடுகையில் 25.5 சதவீதம் உயர்ந்துள்ளது.**

**ஆனால் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா 2011 ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்ற பின்னர், இவ்வழக்குகள் 2016 ஆம் ஆண்டு இறுதியில் 1,511 ஆக குறைந்துள்ளன.**

**அதாவது 11.9 சதவீதம் குறைந்துள்ளது.**

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் **2005 ஆம் ஆண்டு இறுதியில் 74 ஆக இருந்த ஆதாயக் கொலை வழக்குகள்**, திமுக ஆட்சியின் 2010 ஆம் ஆண்டு இறுதியில் **153 ஆக உயர்ந்து இருந்தது.**

**இதன் உயர்வு 106.8 சதவீதம் ஆகும்.**

2010 ஆம் ஆண்டு, திமுக ஆட்சியில் **153 ஆக இருந்த ஆதாயக் கொலை வழக்குகள்,** மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், 2016 ஆம் ஆண்டு இறுதியில் 92 ஆக குறைந்துள்ளன.

அதாவது 2016 ஆம் ஆண்டு இறுதியில் ஆதாயக்கொலைகள் 39.9 சதவீதம் குறைந்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !**

கொள்ளை வழக்குகளைப் பொறுத்தமட்டில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கடந்த 2005 ஆம் ஆண்டு இறுதியில், மாநிலத்தில் 437 வழக்குகள் தாக்கலாகியிருந்தன.

திமுக ஆட்சியின் இறுதியில் 2010–ல் 1,817 கொள்ளை வழக்குகள் தாக்கலாகியிருந்தன.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் 2005ஆம் ஆண்டு இறுதியில் 437 ஆக இருந்த கொள்ளை வழக்குகள், 2010 ஆம் ஆண்டு திமுக ஆட்சியின் இறுதியில் 1,817 ஆக உயர்ந்துள்ளது. இதன் உயர்வு 315.8 சதவீதம் ஆகும்.

திமுக ஆட்சியின் 2010 ஆம் ஆண்டு இறுதியில் தாக்கலான 1,817 வழக்குகளை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் 2016 ஆம் ஆண்டு இறுதியில் தாக்கலான 1,680 வழக்குகளோடு **ஒப்பிடும்போது 7.5 சதவீதம் குறைந்துள்ளது.**

கொலை வழக்குகள் உட்பட சொத்து சம்பந்தமாக 2010 ஆம் ஆண்டு 23,068 வழக்குகள் தாக்கலாகியுள்ளன. 2016 ஆம் ஆண்டு 20,055 வழக்குகள் தாக்கலாகியுள்ளன.

திமுக ஆட்சியில் 2010 ஆம் ஆண்டு தாக்கலான மொத்த சொத்து வழக்குகளை 2016 ஆம் ஆண்டு தாக்கலான வழக்குகளோடு ஒப்பிடும் போது 3,013 வழக்குகள் குறைந்துள்ளன.

இதிலிருந்து காவல்துறையினர் எடுத்து வரும் குற்றத்தடுப்பு நடவடிக்கைகளினால், கொலை மற்றும் சொத்து சம்பந்தமான குற்றங்கள் குறைந்து வருகின்றன என்பது தெளிவாகிறது.

தேசிய குற்ற ஆவண காப்பகம், சென்ற ஆண்டில் வெளியிட்ட, 2015 ஆம் ஆண்டைய அறிக்கையின்படி, சொத்து சம்பந்தமாக நமது மாநிலத்தில் 2015 ஆம் ஆண்டு தாக்கலான குற்றங்களை மற்ற மாநிலங்களில் தாக்கலான குற்றங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் தாக்கலான குற்றங்களின் எண்ணிக்கை குறைந்தே காணப்படுகின்றன.

உதாரணத்திற்கு, 2015 ஆம் ஆண்டு மகாராஷ்டிராவில் 87,329–ம், உத்திரபிரதேச மாநிலத்தில் 60,144–ம், மத்திய பிரதேசத்தில் 43,163–ம், ராஜஸ்தானில் 36,664–ம், கர்நாடகாவில் 29,463–ம், பீகாரில் 29,105–ம்,

அரியானாவில் 28,493–ம், மேற்கு வங்கத்தில் 22,388–ம், தெலங்கானாவில் 20,219–ம், குஜராத்தில் 19,661–ம், மற்றும் ஆந்திரபிரதேசத்தில் 19,170–ம் குற்ற வழக்குகள் தாக்கலாகியுள்ளன.

**ஆனால் நமது மாநிலத்தில் இக்குற்றங்கள் கடந்த 2015ம் ஆண்டு 18,263 மட்டும் தாக்கலாகியுள்ளன.**

பொதுவாக, குற்ற நிகழ்வுகளை ஒப்பிடும்போது, குற்றவிகிதம் என்ற எண்ணிக்கை பயன்படுத்தப்படுகிறது. இது 1 லட்சம் மக்கள் தொகைக்கு எத்தனை குற்றங்கள் நடந்துள்ளன என்பதன் குறியீடு ஆகும்.

கடந்த 2015 ஆம் ஆண்டு நடந்த சொத்து சம்பந்தமான குற்றங்களின் தமிழ்நாட்டின் குற்ற விகிதம் 26.4 ஆகும். **இது தேசிய சராசரி அளவான 40.4 சதவிகிதத்துடன் ஒப்பிடும் போது 14 புள்ளிகள் குறைவாக உள்ளது.**

ஆனால், இக்குற்ற விகிதம் அரியானாவில் 104.7 ஆகவும், மகாராஷ்டிராவில் 73.3 ஆகவும், அருணாசல பிரதேசத்தில் 70.1 ஆகவும், அசாமில் 57.6 ஆகவும், மத்திய பிரதேசத்தில் 56 ஆகவும், தெலங்கானாவில் 55.3 ஆகவும், ராஜஸ்தானில் 50.7 ஆகவும், கர்நாடகாவில் 47.5 ஆகவும், ஒடிசாவில் 38.8 ஆகவும், ஆந்திரபிரதேசத்தில் 37.3 ஆகவும் மற்றும் குஜராத்தில் 31.5 ஆகவும் உள்ளது.

இதிலிருந்து 2015 ஆம் ஆண்டில், மாநிலத்தில் சொத்து சம்பந்தமாக தாக்கலாகும் வழக்குகளின் குற்ற விகிதம் தேசிய குற்ற விகிதத்தைவிட தொடர்ந்து குறைவாக இருந்து வருவதும் மற்ற மாநிலங்களின் குற்ற விகிதத்தை ஒப்பிடும் போதும், நமது மாநிலத்தில் இக்குற்ற விகிதம் குறைவாக இருந்து வருவதும் தெளிவாக தெரியவருகிறது.

மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் 2013, 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளுக்கான புள்ளிவிவரத்தின்படி களவு போன சொத்துக்களை மீட்டதில் இந்த மூன்று ஆண்டுகளிலும் தமிழகம் அகில இந்திய அளவில் **தொடர்ந்து முதலிடத்தில்** இருந்து வருகிறது என்பது நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டிய செய்தியாகும்.

மக்கள் தொகை பெருக்கம், வாகனங்களின் எண்ணிக்கை, அதிகப்படியான மக்கள் நகரங்களை நோக்கி குடிபெயர்தல், தகவல் தொழில்நுட்ப புரட்சியால் நிகழும் கணினிசார் குற்றங்கள், மாறிவரும் சமுதாய சூழ்நிலையை சாதகமாக்கி மோசடிகளில் ஈடுபட்டு பணம் சம்பாதித்தல் போன்றவற்றால் குற்ற நிகழ்வுகள் உலகளவில் அதிகரித்து வருகின்றன என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் நமது மாநிலத்தில் காவல் துறையினர் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் குறித்து முன்கூட்டியே தகவல்கள் சேகரித்து அதனடிப்படையில் எடுத்து வரும் நடவடிக்கையினால் குற்றங்கள் குறைந்து வருகின்றன என்பதை நான் மேலே குறிப்பிட்டுள்ள புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

மாநிலத்தில் கடந்த ஆறு ஆண்டுகளாக பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் குற்றங்களின் மீது அதிக கவனம் செலுத்தி, பெறப்படும் அனைத்து புகார்கள் மீதும் உடனடியாக வழக்கு பதிவு செய்து, எதிரிகள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் பெண்களுக்கெதிரான குற்றங்கள் குறைந்து வருகின்றன.

உதாரணமாக, கடந்த திமுக ஆட்சியின் போது (2006–2010) – ஐந்து வருடங்களில், வரதட்சணைக் கொலை வழக்குகள் 961–ம், மானபங்க வழக்குகள் 7,071–ம், பாலியல் கொடுமை வழக்குகள் 3,840–ம், கற்பழிப்பு

வழக்குகள் 2,835–ம் தாக்கலாகியுள்ளன. அதாவது இந்த ஐந்தாண்டுகளில் நடைபெற்ற இக்குற்ற வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 14,707 ஆகும்.

கடந்த 2011 – 2016 ஆகிய ஆறு வருடங்களில், வரதட்சணைக் கொலை வழக்குகள் 598ம், மானபங்க வழக்குகள் 7,351ம், பாலியல் கொடுமை வழக்குகள் 1,435ம், கற்பழிப்பு வழக்குகள் 6,980ம் தாக்கலாகியுள்ளன.

அதாவது இந்த ஆறு ஆண்டுகளில் நடைபெற்ற இக்குற்ற வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 16,364 ஆகும். திமுக ஆட்சியின் போது ஆண்டொன்றுக்கு சராசரியாக 2,941 வழக்குகள் தாக்கலாகியுள்ளன. ஆனால் அம்மா அரசின் ஆட்சி காலத்தில் ஆண்டொன்றுக்கு சராசரியாக 2,727 வழக்குகள் தாக்கலாகியுள்ளன.

**இதிலிருந்து அதிமுக ஆட்சியின் போது இக்குற்றங்கள் குறைந்து வருவது என்பது தெள்ளத்தெளிவாக தெரியவருகிறது.**

கற்பழிப்பு வழக்குகளைப் பொறுத்தவரை கடந்த திமுக ஆட்சியின் போது அவ்வழக்குகள் மனுக்களாகவும், மானபங்க வழக்குகளாகவும் பதிவு செய்யப்பட்டு முடிக்கப்பட்டது போல் அல்லாமல், தற்போது அப்புகார்கள் மீது உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் கற்பழிப்பு வழக்குகளாக பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாலும், பாதிக்கப்பட்டவர்கள் எவ்வித தயக்கமும் இல்லாமல் புகார்கள் அளித்து வருவதாலும், POCSO சட்டத்தின்படி கற்பழிப்பின் வயது குறித்த பொருள் வரையறை மாற்றத்தின் காரணமாகவும் இவ்வழக்குகள் சற்று கூடியுள்ளது.

மேலும், தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் புள்ளி விவர அறிக்கையின்படி, பெண்களுக்கெதிரான மொத்த குற்றங்கள் 2015 ஆம் ஆண்டு உத்தரபிரதேசத்தில் 35,527 குற்றங்களும், மேற்குவங்கத்தில் 33,218 குற்றங்களும், மகாராஷ்டிராவில் 31,126 குற்றங்களும், ராஜஸ்தானில் 28,165

குற்றங்களும், மத்திய பிரதேசத்தில் 24,135 குற்றங்களும், அசாமில் 23,258 குற்றங்களும், ஒடிசாவில் 17,144 குற்றங்களும், ஆந்திரபிரதேசத்தில் 15,931 குற்றங்களும், தெலங்கானாவில் 15,135 குற்றங்களும், பீகாரில் 13,891 குற்றங்களும், கர்நாடகாவில் 12,705 குற்றங்களும், கேரளாவில் 9,708 குற்றங்களும், அரியானாவில் 9,446 குற்றங்களும் மற்றும் குஜராத்தில் 7,762 குற்றங்களும் நடந்துள்ளன.

ஆனால் தமிழ்நாட்டில் பெண்களுக்கெதிரான மொத்த குற்றங்கள் 2015 ஆம் ஆண்டு 5,847 மட்டுமே பதிவாகியுள்ளன. **எனவே, தமிழ்நாட்டில் குற்றத்தடுப்பு நடவடிக்கை சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருவதால், பெண்களுக்கெதிரான குற்றங்கள் பிற மாநிலங்களோடு ஒப்பிடுகையில், பெருமளவு குறைவாகவே இருப்பது இப்புள்ளி விவரங்களின்படி தெளிவாகிறது.**

மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் அரசில், பெண்களின் முன்னேற்றத்திற்கும், அவர்களின் பாதுகாப்பிற்கும் உத்தரவாதம் அளிக்கும் வகையில், பெண்கள் அதிகமாக கூடும் நிகழ்ச்சிகள், பணிபுரியும் இடங்கள், கல்வி நிலையங்கள், வணிக வளாகங்கள், கோயில்கள் போன்ற இடங்களில் காவல்துறையினர் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

காவல்துறையினர், மாநிலத்தில் தடை செய்யப்பட்ட அடிப்படைவாத இயக்கங்களின் செயல்பாடுகளை கூர்ந்து கண்காணித்து, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்து, மாநிலத்தில் பயங்கரவாதச் செயல்கள் தலைதூக்கா வண்ணம் தடுத்து வருகின்றனர். மாநில எல்லைகளில் சோதனைச் சாவடிகள் அமைத்து கண்காணித்தும், காட்டுப்பகுதிகளில் தேடுதல் வேட்டைகள் நடத்தியும், நச்சலைட்டுகளின்

தீவிரவாதச் செயல்கள் தமிழகத்தில் வேரூன்றா வண்ணம் கண்காணித்து வருகின்றனர்.

மேலும், கடந்த ஆறாண்டு காலத்தில் பல கோரிக்கைகளுக்காக மாநிலத்தில் பல்வேறு அமைப்பினர் நடத்திய போராட்டங்களை காவல் துறையினர் திறமையாகவும், பொறுமையோடும் கையாண்டு, அப்போராட்டங்களால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படாமல் பார்த்து கொண்டனர்.

மேலும் தாக்கலாகும் பெரும்பாலான வழக்குகளில் துரிதமாக செயல்பட்டு எதிரிகளை கண்டுபிடித்து கைது செய்து வருவதோடு, சொத்து சம்பந்தமான வழக்குகளில் களவு போன பொருட்களை மீட்டு, உரிமையாளர்களிடம் ஒப்படைத்தும் வருகின்றனர்.

காவல் துறையினர் துப்பு ஏதும் கிடைக்காத வழக்குகளிலும் கடுமையான முயற்சிகள் மேற்கொண்டு திறமையாக புலன் விசாரணை செய்து எதிரிகளை கண்டுபிடித்து கைது செய்து வருகின்றனர்.

காவல் துறையினர் புலன் விசாரணை மேற்கொள்ளும் போது மதி நுட்பத்துடன் செயல்பட்டு வழக்குகளை கண்டுபிடித்து வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் கடந்த ஆறு ஆண்டுகளில், காவல் துறையை நவீனப்படுத்துவதிலும், சீருடைப் பணியாளர்களின் நலனில் எப்பொழுதும் அக்கறை கொண்டு, காவல் துறையினருக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பதிலும், அவர்களது நலனுக்காக தொலைநோக்குப் பார்வையுடன் பல உன்னத திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருவதிலும், தமிழ்நாடு அரசு, பிற மாநிலங்களுக்கு

தொடர்ந்து முன்னுதாரணமாக திகழ்ந்து வருகிறது. அவற்றில் சிலவற்றை நான் இம்மாமன்றத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

உதாரணமாக,

உங்கள் சொந்த இல்லம் திட்டம்,
மலிவு விலையில் பொருட்கள் வழங்கும் பல்பொருள் அங்காடி திட்டம்,

உட்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் குழுத்திட்டம்,

தமிழ்நாடு அரசு உணவு மானியத்திட்டம்,

இலவச முழுஉடற் பரிசோதனை திட்டம்,

தமிழ்நாடு அரசு சிறப்பு உதவித் தொகை திட்டம்,

காவலர் நல நிதி உதவி திட்டம்,

குழு காப்பீட்டு திட்டம்,

காவல்துறையினர் கடமையாற்றும் போது காயமடைந்தாலோ அல்லது வீர தீர செயல்புரிந்து உயிரிழக்க நேரிட்டாலோ அவர்களது குடும்பத்தினருக்கு கருணைத் தொகை வழங்கும் திட்டம் போன்றவை ஆகும்.

இது மட்டுமல்லாமல், காவலர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பல்வேறு படிகள் அவ்வப்போது உயர்த்தி வழங்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !**

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு காவல் துறையினரின் நலன் கருதி, அவர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருவதோடு, காவல்துறையினர் திறம்பட செயல்பட ஏதுவாக அவர்களுக்கு

தேவையான வாகனங்கள், அலுவலகங்கள் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வருகிறது.

உதாரணமாக, கடந்த 2010 ஆம் ஆண்டு திமுக ஆட்சியின் இறுதியில் காவல் துறைக்கு 2,962 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில்,

இவ்வாண்டு (2017–18) நிதிநிலை அறிக்கையில் 6,483 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், மாநில அரசு, மத்திய அரசுடன் இணைந்து 560.12 கோடி ரூபாய் செலவில் காவல் துறையினருக்கு தேவையான நவீன பயிற்சி அளித்தல், தொலைத்தொடர்பு, கட்டடம், வாகனம் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தந்துள்ளது.

காவல் துறையில் ஏற்படவுள்ள காலிப்பணியிடங்கள் முன்னதாகவே கண்டறியப்பட்டு, உரிய நேரத்தில் அவற்றை நிரப்ப நடவடிக்கைகள் எடுத்து வருவதோடு, காவல் துறையில் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து வரும் காவல் ஆளிநர்களுக்கு அவ்வப்போது பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழக காவல் துறையில் 30–6–2017 அன்று நிலவரப்படி அனுமதிக்கப்பட்ட இடங்கள் 1 லட்சத்து 23 ஆயிரத்து 570 ஆகும். இதில் பணியில் உள்ளவர்களின் எண்ணிக்கை 1 லட்சத்து 5 ஆயிரத்து 99 ஆகும்.

காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் தமிழ்நாடு
சீருடைப் பணியாளர் தேர்வாணையம் ஆகியவை அப்பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்து வருகின்றன.

கடந்த ஆறு ஆண்டுகளாக 20,301 காவலர்களும், . . 1,304 உதவி ஆய்வாளர்களும் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சிக்கு பின்னர் அவர்கள் காலிப்பணியிடங்களில் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

இதே போன்று கடந்த 16.5.2011 முதல் 30.6.2017 வரை முதல் நிலைக் காவலர் முதல் காவல் துறை இயக்குநர் வரையிலான பல்வேறு பதவிகளில் மொத்தம் 49,574 நபர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழக காவல் துறையில் பணிபுரியும் காவல் துறையினருக்கு சிறப்பான முறையில் குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம், கடந்த ஆறு ஆண்டுகளாக 2,283.42 கோடி ரூபாய் செலவில்,

14,835 காவல் குடியிருப்புகள்,
453 காவல் நிலையங்கள்,
89 அலுவலக கட்டடங்கள்,
27 துயில் கூடங்கள் மற்றும்
129 இதர கட்டடங்களை கட்டி ஒப்படைத்துள்ளது.

மேலும், 6,399 காவல் குடியிருப்புகள்,
117 காவல் நிலையங்கள்,
43 அலுவலக கட்டடங்கள்,
14 துயில் கூடங்கள்,
30 இதர கட்டடங்கள் ஆகியவற்றை இக்கழகம் கட்டி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !**

காவல் துறைக்குத் தேவையான பொருட்கள் வாங்கிட சுய விருப்புரிமை நிதி என்ற பெயரில் ஆண்டொன்றிற்கு ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கி ஒவ்வொரு முறையும் அனுமதிக்காக அரசை அணுகத் தேவையின்றி காவல் துறை இயக்குநரே நிதி மற்றும் நிர்வாக அனுமதி வழங்கி இத்தொகைக்குள் பொருட்கள் வாங்கவும், திட்டங்களை நிறைவேற்றவும் வழிவகை செய்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 30.12.2012 அன்று உத்தரவிட்டார்கள்.

இத்திட்டம் முன் எப்போதுமில்லாத புதிய திட்டம் என்பது மட்டுமின்றி வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத முன்னோடி முயற்சி ஆகும். இத்திட்டத்தின் கீழ் காவல்துறையின் பயன்பாட்டிற்காக மாநிலம் முழுவதும் பல்வேறு உபயோகமானப் பொருட்கள் உடனுக்குடன் வாங்கப்பட்டு வருகின்றன.

மேலும், காவல் நிலையங்களில் அவ்வப்போது ஏற்படும் எதிர்பாராத செலவினங்களுக்காக மாதம் ஒன்றிற்கு சிறிய காவல் நிலையத்திற்கு 3,000 ரூபாய், நடுத்தர காவல் நிலையத்திற்கு 5,000 ரூபாய், பெரிய காவல் நிலையங்களுக்கு 7,000 ரூபாய் வழங்கப்பட்டு வருவதோடு, நிரந்தர முன் பணமாக ஆண்டிற்கு ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் 10,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

மத்திய அரசு ‘குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் வலைபின்னல் முறை’ (Crime and Criminals Tracking Network Systems-CCTNS) என்ற தேசிய மின்ஆளுமை திட்டத்தை (National e-governance programme) அறிமுகப்படுத்திய போது, மாநில அரசு அதன்

முக்கியத்துவத்தை உணர்ந்து, அத்திட்டத்தை நமது மாநிலத்தில் செயல்படுத்த முடிவு செய்து, தேவையான நிதியை ஒதுக்கி, மாநில குற்ற ஆவண காப்பகம் மூலமாக இத்திட்டத்தை செயல்பாட்டிற்கு கொண்டு வந்தது.

இத்திட்டத்தின் கீழ் குடிமக்கள் சேவை தளம் என்ற பெயரில் வலைதளம் ஒன்று தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் உருவாக்கப்பட்டு, கடவுச்சீட்டு சரிபார்த்தல், தனி நபர் நடத்தை சரிபார்த்தல், காணாமல் போன நபர்களை கண்டுபிடித்தல், காணாமல் போன பொருட்கள் மற்றும் வாகனங்களை ஒப்பீடு செய்து கண்டுபிடித்தல், அடையாள அட்டைகளை ஒப்பீடு செய்தல் போன்ற பல்வேறு பணிகளுக்கு இத்திட்டம் உதவியாக இருந்து வருவதோடு, பொதுமக்களும் இந்த வலைதளம் மூலமாக தங்கள் புகார்களை பதிவு செய்யவும், உரிம படிவங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்கள், 2011–12–ஆம் ஆண்டு முதல் 2016–2017 ஆம் ஆண்டு வரை காவல்துறைக்கான மானியக் கோரிக்கையின் போது அறிவித்த அறிவிப்புகள் 680. அவற்றுள் 415 அறிவிப்புகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. 261 அறிவிப்புகள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அரசாணைகள் வெளியிடப்பட வேண்டிய நிலையில் 3 அறிவிப்புகள் உள்ளன. மத்திய அரசின் பரிசீலனையில் ஒரு அறிவிப்பும் உள்ளன. **இவ்வாறு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் 99.5 சதவீத அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டு, ஒரு சாதனை அரசாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு திகழ்கிறது என்பதை பெருமையுடன் பதிவு செய்கிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !**

“Prevention is better than cure” என்ற கூற்றுக்கேற்ப, காவல்துறையினர், வரும் முன் காப்பதே சிறந்த நிர்வாகத்தின்

அடையாளமாகும் என்ற குறிக்கோளுடன் மாநிலத்தில் எந்தவிதமான சட்டம் ஒழுங்கு பிரச்சினையோ, குற்ற நிகழ்வுகளோ, தீவிரவாத மற்றும் பயங்கரவாதச் செயல்களோ நிகழாவண்ணம் தடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றனர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !**

காவல்துறை பணி என்பது மக்கள் நலன்காக்கும் பணியாக இருந்தாலும், சவால்கள் நிரம்பிய ஒன்றாகும். சட்ட அறிவு, விசாரணை செய்வதில் ஆற்றல், நிர்வாகத் திறமை, சமயோசித புத்தி, துணிவு இவை அனைத்திற்கும் மேலாக அப்பழுக்கற்ற நேர்மை போன்றவை காவல் பணியை புனிதமாக்கும் முக்கிய பண்புகளாகும்.

அந்த வகையில் தமிழகக் காவல்துறையினர் பேறறிஞர் அண்ணா அவர்களின் வழியில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற உணர்வோடு சட்டத்தை மதிப்போர்க்கு இன்முகம் காட்டியும், மீறுவோரை இரும்புக்கரம் கொண்டு அடக்கியும் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை பராமரிப்பதில் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்து வருகின்றனர்.

அவர்கள் கடும் வெயிலையும், மழையையும், குளிரையும், புயல், வெள்ளம் உள்ளிட்ட இடர்பாடுகள் எவற்றையும் பொருட்படுத்தாது, தங்கள் குடும்பத்தை மறந்து, என் கடன் பணி செய்து கிடப்பதே என ஓய்வின்றி கடமையாற்றி வருகின்றனர். காவல் துறையினரின் தன்னலமற்ற சேவைகளை நான் பாராட்டுகிறேன்.

இதனை புரிந்துகொள்ளாத சிலர், காவல்துறையினர் ஆற்றி வரும் சேவையை பாராட்டி அவர்களை ஊக்குவிக்காமல், எப்பொழுதேனும் சில நேரங்களில் நடைபெறும் அசம்பாவிதங்களை பூதாகரமாக்கி, அவர்கள் மீது குறை கூறுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

காவலர்களும் இச்சமுதாயத்தில் ஓர் அங்கம் என்பதால், அவர்களும் சமுதாயத் தாக்கங்களுக்கு உள்ளாகி, ஆங்காங்கு ஏற்படும் ஒரு சில தொய்வுகளை பெரிதுபடுத்த வேண்டாமென அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

**அமெரிக்க எழுத்தாளர் சிட்னி ஷெல்டன் அவர்கள்,**

> **"My heroes are those who risk their lives every day to protect our world and make it a better place - police, firefighters and members of our armed forces."**

என்று கூறியுள்ளதிற்கேற்ப,

தங்கள் இன்னுயிரை துச்சமென மதித்து, பணியாற்றி வரும் காவல்துறையினருக்கு தேவையான ஊக்கமளித்து அவர்கள் திறம்பட பணியாற்ற அனைத்து ஒத்துழைப்பையும் நல்குவது அனைவரின் கடமையாகும்.

மாறிவரும் சூழ்நிலையில் பொதுமக்களின் தேவைகளுக்கு ஏற்ப, அனைத்து சவால்களை சந்திக்கக்கூடிய செயல்திறனும் பெற்ற ஒரு அமைப்பாக காவல் துறையை மாற்றி, மாநிலத்தில் பொது அமைதியை பாதுகாத்து, தமிழகம் அனைத்துத் துறைகளிலும் வளர்ந்து நாட்டிலேயே சிறந்த மாநிலமாக திகழ உதவும் வகையில் காவல்துறை பணியாற்ற தேவையான அனைத்து உதவிகளையும் மாண்புமிகு அம்மாவின் அரசு செய்யும் என்று உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல்துறையினர், நம் அனைவரின் எதிர்பார்ப்புக்கும் விருப்பங்களுக்கும் ஏற்ற வகையில் சட்டப்படி தங்கள் கடமைகளை செவ்வனே செய்து வருங்காலத்திலும் அனைவரின் பாராட்டையும் பெறுவார்கள் என்று உறுதியுடன் நம்புகிறேன்.

**தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் தங்களது உயிரினை துச்சமாகக் கருதி திறம்பட செயலாற்றுவதோடு மட்டுமல்லாமல், மிகவும் சவாலான பேரிடர் நெருக்கடிகளை கையாள்வதிலும் முனைப்புடன் திறமையாக செயல்பட்டு வருகின்றனர்.

இயற்கை சீற்றங்களான வெள்ளம் மற்றும் புயல் ஆகியவற்றினால் ஏற்படும் பெரும் பாதிப்புகளிலிருந்து இயல்பு நிலைக்கு கொண்டு வர இத்துறைப் பணியாளர்கள் ஆற்றுகின்ற ஒப்பற்ற பணி பொதுமக்களால் பெரிதும் பாராட்டப்படுகிறது.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய முயற்சியாலும், இந்த அரசின் வலிமையான ஆதரவு மற்றும் வழிகாட்டுதலாலும், தொழில்நுட்பத் திறன் பெற்று அனைத்து கோணங்களிலும் முழுமையான வளர்ச்சி அடைந்துள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தபடி, பெருகி வரும் பலமாடிக் கட்டடங்களில் ஏற்படும் தீ விபத்துகளை சமாளிப்பதற்காக வான்நோக்கி உயரும் 104 மீட்டர் நீளம் ஏணி கொண்ட இரண்டு நவீன ஊர்திகள் மக்கள் பயன்பாட்டிற்கு 4.3.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இந்தியாவிலேயே மிக அதிக உயரத்தை அடையக் கூடிய ஏணியாக இது திகழ்கிறது. நேற்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர் இதை தெரிவித்தார். அதற்கு பதிலாக தருகிறேன்.

சமீபத்தில் தி.நகர் சென்னை சில்க்ஸில் ஏற்பட்ட தீ விபத்தின் போதும், தீயை அணைக்க, இந்த ஊர்தி பயன்படுத்தபட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

2010-2011–ஆம் ஆண்டில் இத்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி 159 கோடியே 22 லட்சம் ரூபாயாக இருந்தது. 2016-2017 ஆம் ஆண்டு 222 கோடியே 91 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2011-12-ஆம் ஆண்டு முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான மானியக் கோரிக்கையின் போது, 51 அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள், 35 அறிவிப்புகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள அறிவிப்புகளுக்கும் அரசாணைகள் வெளியிடப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடந்த 6 ஆண்டு கால ஆட்சியில் 15 புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தி.நகர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் கட்ட மாநகராட்சி நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. விரைவில் கட்டடப் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் மூலமாக துவங்க உள்ளன.

இரசாயன மற்றும் தொழிற்சாலைகளில் ஏற்படக் கூடிய தீ விபத்துக்களை எதிர்கொள்வதற்காக சிறிய நுரைதகர்வு ஊர்திகளை முக்கிய நகரங்களுக்கு படிப்படியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு ஸ்ரீபெரும்புதூர், சிவகாசி, கடலூர், மதுரை திருமங்கலம், சென்னை தண்டையார்பேட்டை போன்ற முக்கிய இடங்களுக்கு சிறிய நுரை தகர்வு ஊர்தி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வரப்பட உள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பின்படி, திருமணமாகாத தீயணைப்புப் பணியாளர்கள் தங்குவதற்கு ஏதுவாக தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக சென்னை தங்கசாலையில் 50 நபர்கள் தங்கக் கூடிய படைகுடியிருப்பும், மேலும் தங்கசாலையில் பணியாளர் குடியிருப்புகள், வண்ணாரப்பேட்டையில் நிலை அலுவலர் குடியிருப்புகள் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் காங்கேயம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டன.

அனைத்து தீயணைப்புப் பணியாளர்களையும் பாதுகாக்கும் விதமாக தற்காப்பு உடைகள் படிப்படியாக வழங்கப்பட்டு வருகிறது. 40 வயது முடிவுற்ற அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கும் ஆண்டுக்கு ஒரு முறை, அரசு மருத்துவமனைகளில் கட்டணமின்றி முழு உடல் பரிசோதனை செய்து கொள்ளும் திட்டம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

காவல் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போல் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கும் ‘‘உங்கள் சொந்த இல்லம்’’ திட்டத்தின் கீழ் குடியிருப்புகள், காவல்துறை அங்காடிகள் மூலம் குறைந்த விலையில் பொருட்கள் பெறுதல் மற்றும் உணவுக் கட்டணம் போன்றவை வழங்கப்பட்டு வருகின்றன.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயல்பாட்டினை மேம்படுத்தும் விதமாக அத்தியாவசியமான தொழில்நுட்பக் கருவிகள் கொள்முதல் செய்ய நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் பாராட்டுதல்களை பெற்று மேம்படுத்தப்பட்ட நவீன உபகரணங்கள் உதவியுடன் திறம்பட செயல்பட்டு வரும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பொதுமக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் மேலும் சிறப்பாக தொடர்ந்து செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

“நாட்டின் பொருளாதார வளர்ச்சியும், தனி மனித மேம்பாடும் நிலைத்திட இன்றியமையாததாக விளங்குவது அமைதி. அத்தகைய அமைதி சூழலை ஏற்படுத்துவதில், காவல் துறை முக்கியப் பங்காற்றுகிறது’’.
என்ற மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கூற்றுப்படி தமிழ்நாடு காவல் துறை செயல்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மானியக் கோரிக்கையின் மீது பேசிய இம்மாமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களையும், கோரிக்கைகளையும் பதிவு செய்தனர். அந்த வகையில், மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களின் வேண்டுகோளின்படி, வேலூர் மாவட்டத்தில், முள்ளிப்பாளையம், சேண்பாக்கம், கோணவட்டம் உள்ளிட்ட சில கிராமங்களை வேலூர் கிராமிய காவல் நிலைய கட்டுப்பாட்டிலிருந்து பிரித்து, வேலூர் வடக்கு காவல் நிலைய எல்லைக்குள் சேர்க்க வேண்டும் என கோரிக்கை வைத்தார்கள். நேற்றைய தினம் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அரக்கோணம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ரவி அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அரக்கோணம் தாலுகா காவல் நிலையத்திற்கு வேடல் என்ற கிராமத்தில் புதிய கட்டடம் கட்டி காவல் நிலையத்தை மாற்றுவதற்கு பதிலாக, பொதுமக்களின் வசதியைக் கருதி, தற்போது அக்காவல் நிலையம் இயங்கி வரும் தாலுகா அலுவலக வளாகத்திலேயே புதிய காவல் நிலைய கட்டடம் கட்டப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு குளச்சல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளையும், கருத்துக்களையும் தெரிவித்திருந்தார். அவருடைய கோரிக்கைகள் அனைத்தையும் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருத்தணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.எம்.நரசிம்மன் அவர்கள் திருத்தணி நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் தீயணைப்பு நிலையத்திற்கு ஒரு புதிய கட்டடம் கட்ட கோரினார்கள். அவரது கோரிக்கையினை பரிசீலித்து புதிய கட்டடம் கட்டப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.ஜெ.அன்பழகன், திரு. கே.பி.பி.பாஸ்கர் மற்றும் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு.கே.ஆர்.ராமசாமி ஆகியோரது பல்வேறு கோரிக்கைகளை அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி.ஜெயராமன் அவர்களின் கோரிக்கையை ஏற்று பொள்ளாச்சி நகரில் ஒரு போக்குவரத்து காவல் நிலையமும், கிணத்துக்கடவு நகரில் ஒரு தீயணைப்பு நிலையமும் அமைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு சட்டப்பேரவை எதிர்க்கட்சி தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை மாநகருக்கான ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மைத் திட்டம் முடங்கியுள்ளதாகக் குறிப்பிட்டார்கள். மேலும் அவர் அரசுக்கு பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தார்கள்.

சென்னை மாநகருக்கான ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மைத் திட்டத்திற்கு 117 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு 28.2.2012 அன்று அரசாணை வெளியிடப்பட்டு, திருவாளர்கள் பார்ப்பிள் இப்போடெக் லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டது. ஒப்பந்தப்படி அந்நிறுவனம் முதல்கட்டப் பணியை முடிக்காததாலும், அதற்குரிய விளக்கத்தினை அளிக்காத காரணத்தினாலும், 15.3.2013 அன்று பணி முறிவு அறிவிப்பு வழங்கப்பட்டது. இதனை எதிர்த்து அந்நிறுவனம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, அவ்வழக்கு தற்போது நடுவர் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ளது. இத்திட்டத்தினை முழுமையாக நிறைவேற்ற அரசு அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் என்பதை இங்கே தெரிவித்து அவரது பல்வேறு கருத்துக்களையும், கோரிக்கைகளையும் மாண்புமிகு அம்மாவின் அரசு கனிவுடன் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊர் காவல் பணியில் பணிபுரியும் காவலர்களின் தினப்படி ஊதியம் தற்போது குறைவாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை உயர்த்தி வழங்க பரிசீலிக்கப்படும்.

அதேபோன்று, திரு.தமிமுன் அன்சாரி அவர்கள் வழிபாட்டுத்தலங்களில் ஒலிப்பெருக்கி வைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். அதுவும் பரிசீலிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

இதயத்தில் எங்கள் இதயமாய் துடித்தவரே,
இணையற்ற தலைவியே,

இன்முகம் உடையவரே,
உயிரின் உன்னதமே, உத்தமரே,

அன்பில் தமிழ் மொழியாய்,
அணையா விளக்காய்,

ஆண்டுகள் பல கடந்தாலும்,
இந்த அண்டம் உள்ள வரை
அழியாது உங்கள் புகழ் – அம்மா

இதழ் பேசினாலும்,
இதயம் அழுகிறது, உங்கள் பிரிவால் – அம்மா.
கழகத்தை இரும்பு கோட்டையாய்
காத்த – எங்கள் இதய தெய்வமே,

**எதிர் காலத்தில்**
எவரையும் வெல்லும் ஆற்றலை
எங்களுக்கு அளித்த
– எங்கள் இதய தெய்வமே

**நிகழ் காலத்தில்**
நிழலாய், வழிகாட்டியாய்

எங்களை வழி நடத்தும்
– எங்கள் இதய தெய்வமே,
அம்மாவை அறிந்தவர் எல்லாம்
அவையில் அமர்ந்திருக்க
அனைவரையும்
அரவணைத்து செல்லும்
ஆக்கத்தையும், ஊக்கத்தையும்
அருள்புரிவாய் அம்மா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

காவல்துறை, தீயணைப்பு (மற்றும்) மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கைகளை இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் இம்மாமன்றத்தில் சமர்ப்பிக்க நல்வாய்ப்பினை பெற்றமைக்கு எனது இதயங்கனிந்த நன்றியினை மாண்புமிகு அம்மாவின் பொற்பாதங்களில் வணங்கி சமர்ப்பிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

இத்தருணத்தில் உள்துறைச் செயலாளர், காவல் துறை தலைமை இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் மற்றும் அதிகாரிகள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

தற்போது நான், காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தொடர்பான புதிய அறிவிப்புகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

* * * * *